மாலை முரசு
பக்கங்கள் 16 + 08
கனடா முரசு இணைப்பு

## பொலிஸ்மா அதிபர் தொடர்பான
# உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்கமாட்டோம்

**அரசு அதிரடி அறிவிப்பு**



அரசமைப்பு பேரவையின் அதிகாரத்தை நீதித்துறை சவாலுக்குட்

04

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 ஆடி 10 வெள்ளிக்கிழமை 26.07.2024 அதிர்வு 361




# செப்டெம்பர் 21 இல் ஜனாதிபதித் தேர்தல்


## வெளியானது உத்தியோகபூர்வ அறிவிப்பு

**2024ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 21 ஆம் திகதி நடத்தப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு இன்று உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.**

04




## கட்டுப்பணத்தை செலுத்திய ரணில்



ஜனாதிபதித் தேர்தலுக்காக ரணில் விக்கிரமசிங்க சார்பில் கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சட்டத் தரணி ரொனால் சி பெரேரா இன்று வெள்ளிக்கிழமை பகல் தேர்தல்கள் ஆணைக்

04

## இலங்கையில் நீதியான - சுதந்திரமான தேர்தலை எதிர்பார்க்கின்றது அமெரிக்கா



இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் செப்டெம்பர் 21 ஆம் திகதி நடைபெறும் என்ற தேர்தல்கள் ஆணைக்குழுவின் அறிவிப்பை வரவேற்கின்றோம் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

இது ஜனநாயகத்துக்கான இலங் கையின் நீண்டகால அர்ப்பணிப்பை உறுதிப்படுததுகின்றது என்றும் அவர்

04





# ரணிலா? தம்மிக்கவா? திங்கள் ‘மொட்டு’ முடிவு

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நிலைப்பாடு எதிர்வரும் திங்கட்கிழமை அறிவிக்கப்படவுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ள நிலையிலேயே மொட்டுக் கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் மேற்படி தகவலை வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதா அல்லது தமது கட்சி சார்பில் வேட்பாளராகத் தம்மிக்க பெரேராவைக் களமிறக்குவதா என்பது குறித்து மொட்டுக் கட்சி பரிசீலித்து வருகின்றது. இந்நிலையிலேயே எதிர்வரும் திங்கட்கிழமை இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது.

### ஜனாதிபதித் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டுள்ள நிலையில்

# சஜித்துடனான ஒப்பந்தம் குறித்து ஆராய ஆகஸ்ட் 2 இல் கூடுகின்றது மனோ அணி

வரும் ஆகஸ்ட் 2ஆம் திகதி கொழும்பில் நேரடியாகவும், மெய்நிகர் மூலமாகவும் தமிழ் முற்போக்குக் கூட்டணி அரசியல் குழு கூட்டம் நடைபெறும் என்று அதன் தலைவர் மனோ கணேசன் அறிவித்துள்ளார்.

இதன்போது செப்டெம்பர் 21 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஆராயப்பட்டு அதிகாரபூர்வ தீர்மானங்கள் எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

உத்தேச ஐக்கிய மக்கள் கூட்டணி அரசில் நடைபெற வேண்டும் என்ற நோக்கில், தமிழ் முற்போக்குக் கூட்டணி பிரதிநிதித்துவம் செய்யும் மக்கள் நலன் சார்ந்து ஏற்கனவே செய்து கொண்டுள்ள சமூக நீதி உடன்படிக்கையை மேலும் தர முயர்த்துவது, அதன் சாராம்சங்களை ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இடம்பெறச் செய்வது, ஐக்கிய மக்கள் கூட்டணியில் சட்டபூர்வமாக இணைவது தொடர்பாக ஐக்கிய மக்கள் கூட்டணியின் நகல் யாப்பை ஆராய்வது, இதையடுத்து இடம்பெறக் கூடிய நாடாளுமன்றத் தேர்தல் ஆகிய விடயங்கள் தொடர்பில் அரசியல் குழுவில் காத்திரமாக ஆராயப்படும் என்றும் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. விடுத்துள்ள செய்திக் குறிப்பில் கூறியுள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-



“தமிழ் முற்போக்குக் கூட்டணி பங்கு பெறுகின்ற எமது அரசு விரைவில் உருவாகும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது. த.மு.கூட்டணி, வெறும் வாய் பேச்சில் காலத்தை கடத்தும் கட்சி அல் என்பதை நாம் எமது முதல் கட்ட 2015 - 2019 நல்லாட்சி காலத்திலேயே நிரூபித்துள்ளோம். அன்று நாம் ஆரம்பித்து வைத்த பல முற்போக்குப் பணிகள் இன்று நின்று போயுள்ளன. அவற்றை மீள ஆரம்பிக்க நாம் மீள ஆட்சிக்கு வர வேண்டும் என்பது காலத்தின் கட்டாயம்.

வாழ்வாதார காணி உரிமை, வதிவிட வீட்டு காணி உரிமை, இடைகால சம்பளம், கல்வி, சுகாதாரம் ஆகிய அனைத்து துறைகளிலும் மறுமலர்ச்சியை த.மு. கூட்டணி ஏற்படுத்தும். இந்த அரசு மலையகப் பெருந்தோட்ட மக்கள் மத்தியில், நாள் சம்பளம், இந்திய நன்கொடை வீடமைப்பு திட்டத்துக்கு காணி வழங்கல், சுயமாக வீடு கட்டி கொள்ள காணி வழங்கல் ஆகிய மூன்று முக்கிய துறைகளிலும் படு தோல்வி அடைந்து விட்டது.

த.மு.கூட்டணி பங்காளியாக இடம் பெறும் எமது ஆட்சியில், மலைநாட்டு பெருந்தோட்ட மாவட்டங்களில் தனி வீடுகளை அமைக்க இந்திய வீட்டுத் திட்டத்துக்கு நாம் தடை இன்றி காணி வழங்குவோம். தவிர சுயமாக சொந்த வீடுகளைக் கட்டிக்கொள்ளவும் காணி வழங்குவோம். உழைத்து வாழ கொழும்பு உட்பட மாநகரங்களில் குடியேறி, இன்று வாடகை வீடுகளில் வாழும் மக்களுக்கு தொடர்மாடி மனைகளை வழங்குவோம். மலைநாட்டில் வாழ்வாதார காணி வழங்கல் மூலம் பெருந் தோட்டத் தொழில் துறையில் நமது மக்களை தொழில் முனைவர் பங்காளிகளாக மாற்றுவோம்.

இந்தக் கொள்கைகள் தொடர்பிலும் எதிர்வரும் ஆகஸ்ட் 2ஆம் திகதி கொழும்பில் நேரடியாகவும், மெய்நிகர் மூலமாகவும் கூடும் தமிழ் முற்போக்குக் கூட்டணி அரசியல் குழு அதிகாரபூர்வ தீர்மானங்களை எடுக்கும்.” – என்றுள்ளது .

# அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தல் விழிப்புணர்வு





(எம்.எம்.றம்ஸீன்)

அரசகரும மொழிகள் தினத்தை முன்னிட்டு மாவட்ட செயலகத்திலுள்ள அனைத்து கிளைகளிலும் அரச உத்தியோகத்தர்களுக்கு அரச கரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தல் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டமானது நேற்று (25) திருகோணமலை மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.சுதாகரன் தலைமையில் மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

அரசகரும மொழிகள் வாரம் மற்றும் தினத்தை முன்னிட்டு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சால் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இந்த நிகழ்வின் முதல் நாள் நிகழ்வாக அரச அலுவலகங்களில் பணியாற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கான அரச கரும மொழிக் கொள்கை தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு இடம்பெற்றது.

மொழிக் கொள்கையைக் கொண்டிருப்பதன் முக்கியத்துவம், இலங்கையின் அரச கரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தல் மற்றும் அது தொடர்பான சட்டங்கள், அரச கரும மொழிக் கொள்கையின் சட்டப் பின்னணி, 1978 அரசியலமைப்பின் 3 ஆம் அத்தியாயத்தில் – அடிப்படை உரிமைகள், நிர்வாக கட்டமைப்பு, அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கான பொறுப்புகளை வழங்குதல், பிரதான அரசகரும மொழிக்கொள்கைஅமுலாக்கல்அலுவலரின் பொறுப்பு, அரச கரும மொழிக் கொள்கை அமுலாக்கல் அலுவலரின் பொறுப்பு, அரச கரும மொழிகள் தினத்துடன் இணைந்த வாரத்தை கொண்டாடுதல், அரச கரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதன் அனுகூலங்கள் என பல விடயங்கள் இதன்போது கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளரும் சட்டத்தரணியுமான் ஏ.சி.எம் முஸிலால் தெளிவூட்டப்பட்டது.



### பொலிஸ்மா அதிபர் தொடர்பில்

# உயர்நீதிமன்றத்தின் உத்தரவை ரணில் ஏற்றுக்கொள்ள வேண்டும்

## இல்லையேல் பதவி விலக வேண்டும் என்று சபையில் சஜித் இடித்துரைப்பு

பொலிஸ்மா அதிபர் தொடர்பில் உயர்நீதிமன்றம் விடுத்துள்ள இடைக் கால உத்தரவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொள்ள வேண் டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வேண்டுகோள் விடுத் துள்ளார்.



நாடாளுமன்றத்தில் இதனை இன்று தெரிவித்துள்ள சஜித் பிரேமதாஸ, தேசபந்து தென்னக்கோனின் நியமனம் அரசமைப்பின் பொருந்தக்கூடிய விதிக ளுக்குள் இல்லை என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.

"ஜனாதிபதி இந்தப் பிரச்சினையில் இருந்து தப்பியோட முடியாது. ரணில் விக்கிரமசிங்க இன்னமும் ஜனாதிபதி. அவர் ஜனாதிபதி வேட்பாளர் என்பதால் தனது கடமைகளைப் புறக்கணிக்க முடியாது. ஜனாதிபதியால் இதனைச் செய்ய முடியாவிட்டால் அவர் பதவி விலக வேண்டும்." – என்றும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# யாழில் நாளை கருத்தரங்கு

யாழ் முகாமையாளர் நிறுவகம் (JMF) 'குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் முனைவோருக் கான வளர்ச்சி தொடர் பில் நுண் நிதிவழங்கல்' என்ற தொனிப்பொருளில் அமைந்த கருத்தரங்கு ஒன்றை நடாத் துவதற்கான ஒழுங்குகளை மேற்கொண் டுள்ளது.

நாளை சனிக்கிழமை காலை 9.30 மணி முதல் 11.30 மணிவரை யாழ், அரியாலையில் இல 146 புங்கன்குளம் வீதியில் அமைந்துள்ள 'ஜே' ஹோட்ட லின் மூன்றாம் மாடியில் உள்ள 'யுகன்' மண்டபத்தில் இந்த கருத்தரங்கு நடை பெறவுள்ளது.

இலங்கை வங்கியின் 'வணிக மீளெ முச்சியும் மறுவாழ்வும்' என்ற பணிக்குப் பொறுப்பான துணைப் பொது முகா மையாளர் திரு. எஸ் சிவஞ்ஜன்இதில் சிறப்புரையாற்றவுள்ளார்.

# பதில் பொலிஸ்மா அதிபரை நியமிக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் கிடையாது!

## பொலிஸ்மா அதிபர் பதவி வெற்றிடமாகவில்லை என்று நாடாளுமன்றில் இன்று பிரதமர் அறிவிப்பு



நடைமுறைச் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய பதில் பொலிஸ்மா அதிபரை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்குக் கிடையாது என்று பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று விசேட அறிவிப் பொன்றை விடுத்து கருத்துத் தெரிவிக்கையி லேயே அவர் கூறினார்.

இதேவேளை, நாட்டில் பொலிஸ்மா அதிபர் பதவி வெற்றிடமாகவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி தேர்தல்கள் ஆணைக்குழுவால் அறி விக்கப்பட்டுள்ள நிலையில், ரணில் விக்கி ரமசிங்க வேட்பாளராகக் களமிறங்குவாரெனில் அரசமைப்புக்கமைய அவரால் பதில் பொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமிக்க முடியாது என்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன மேலும் குறிப்பிட்டார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இலங்கையில்...

குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மக்கள் தங்கள் எதிர் காலத்தைத் தீர்மானிக்கும் விதத்தில் அவர்களை வலுப்படுத்தும் நீதியான – சுதந்திரமான தேர்தலை

எதிர்பார்க்கின்றோம் என்றும் அமெ ரிக்கத்தூதுவர்மேலும்தெரிவித்துள்ளார்.

### உயர்நீதி...

படுத்த முடியாது என்று பிரதமர் தினேஷ் குணவர்தன இன்று நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

இதேவேளை, பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு எதிராக உயர்நீதிமன்றம் பிறப்பித்துள்ள இடைக் காலத் தடை உத்தரவை வலுவற்றதாக்க அரசமைப்பு பேரவை தலையிட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

பொலிஸ்மா அதிபருக்கு எதிராக உயர்நீதிமன்றம் பிறப்பித்துள்ள இடைக் காலத் தடை உத்தரவில் அடிப்படை சட்ட வலு கிடையாது என்றும், ஆகவே உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்க முடியாது என்றும் பிரதமர் மேலும் குறிப்பிட்டார்.

### செப்டெம்பர்...

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவால் வெளி யிடப்பட்டுள்ள விசேட வர்த்தமானியிலேயே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அத்துடன், ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனு எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட கட்சி சார்பில் போட்டி யிடவுள்ள வேட்பாளர்கள் 50 ஆயிரம் ரூபாவையும், ஏனைய வேட்பாளர்கள் 75 ஆயிரம் ரூபாவையும் கட்டுப்பண மாக செலுத்த வேண்டும் என்றும் தேர் தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

விசேட அறிக்கையொன்றை வெளி யிட்டு தேர்தல்கள் ஆணைக்குழு இத னைத் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது:–

"செப்டெம்பர் 21ஆம் திகதி ஜனாதி பதித் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் மக்கள் தெரிந்துகொள்வதற்காக இந்த அறிக்கை வெளியிடப்படுகின்றது. தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஆகஸ்ட் 15ஆம் திகதி முற்பகல் 9 – 11 மணி வரை இராஜகிரியவிலுள்ள தேர்தல்கள் ஆணைக்குழுவில் ஏற்றுக்கொள்ளப்படும்.

தாக்கல் செய்யப்படும் வேட்புமனுக்கள் தொடர்பில் அன்றைய தினமே முற்பகல் 9 – 11.30 மணி வரை ஆட்சேபனைகளை யும் தெரிவிக்க முடியும். எதிர்த் தரப்பு வேட்பாளர் அல்லது அவர் சார்பில் வேட்பு மனுத் தாக்கல் செய்யும் நபர்களால் இந்த ஆட்சேபனைகளை முன்வைக்க முடியும்.

வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கு முன்னர் சகல வேட்பாளர்களும் கட்டுப் பணத்தைச் செலுத்த வேண்டியது அவசி யமாகும். அதற்கமைய தேர்தலில் அங் கீகரிக்கப்பட்ட கட்சி சார்பில் போட்டியிட வுள்ள வேட்பாளர்கள் 50 ஆயிரம் ரூபாவையும், ஏனைய வேட்பாளர்கள் 75ஆயிரம்ரூபாவையும்கட்டுப்பணமாகச் செலுத்த வேண்டும்.

இன்று வெள்ளிக்கிழமை (ஜூலை 26) முதல் வேட்புமனுத் தாக்கல் தினத்துக்கு முந்தைய தினமான ஆகஸ்ட் 14 ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை காலை 8.30 முதல் மாலை 4.15 வரை தேர்தல்கள் ஆணைக்குழுவின் பிரதான நிதி அதிகாரியால் கட்டுப்பணம் ஏற்றுக் கொள்ளப்படும்." – என்றுள்ளது.

### கட்டுப்பணத்தை...

குழுவில் இவ்வாறு கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளார்.

சுயாதீன வேட்பாளராகவே ரணில் விக்கிரமசிங்க சார்பில் கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது. தேர்தல் தொடர் பான வர்த்தமானி அறிவித்தல் இன்று காலை வெளியான நிலையில் முதலா வதாக ரணில் விக்கிரமசிங்க சார்பில் கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# யானைகள, வன விலங்குகளால் பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு!

**(சர்ஜுன் லாபீர், ஐ.எல்.எம்.நாஸீம்)**

சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவில் கடந்த வருட பிற்பகுதில் யானை மற்றும் வன விலங்குகளால் பாதிக் கப்பட்ட 80 பயனாளிகளுக்கு சுமார் 6 மில்லியன் ரூபா நஷ்ட ஈட்டு கொடுப் பனவு வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு சம்மாந்துறை பிர தேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபா தலைமையில் சம்மாந்துறை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

தேசிய அனர்த்த நிவாரண சேவை உத்தியோகத்தர் எம்.எஸ்.எம் அஸ ாருத்தீனின் ஒழுங்குபடுத்தலின் கீழ் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபே விக்ரம பிரதம அதிதியாக கலந்து கொண்டு நஷ்ட ஈட்டு காசோலைகளை வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் யூ.எல். அஸ்லம், முன்னாள் அரச அதிபரும், சம்மாந்துறை நம்பிக் கையாளர் சபை தலைவருமான ஐ.எம் ஹனீபா, பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் (காணி) பரீதா, கிராம சேவகர்கள கலந்து கொண்டனர்.





நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# சர்வாதிகாரி ரணில்

'காலைச் சுற்றிய பாம்பு கொத்தாமல் விடாது' என்பார்கள். அந்தப் போக்கில்தான் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிச் செயற்பாடுகளும் உள்ளன.

ரணிலின் சுமார் ஐம்பது ஆண்டு கால அரசியலில் நாட்டுத் தலைவருக்கு உரிய வாய்ப்பை மக்கள் அவருக்கு வழங்கவே இல்லை. கடவுள் 'ஆட்டுக்கு அளந்து வாலை வழங்கிய மாதிரி' ரணிலுக்கும் மக்கள் இதுவரை காலமும் பதவி நிலையை அளந்தே வழங்கினர்.

ஆனால் நாட்டில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார நெருக்கடி நிலையைப் பயன்படுத்தி - மக்களை மீறி - அரசியல்வாதிகளூடாக - பின் கதவால் - ஜனாதிபதி பதவி அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டார் அவர்.

வழமைபோல விடயங்களை குழப்பியடிக்கும் கைங்கரியத்தை தாம் பதவியை விட்டு விலக முன்னர் அவர் பண்ணியே தீருவார் என்று பலரும் எதிர்பார்த்தனர். காலைச் சுற்றிய பாம்பு போன்றவர் என்பதால் கொத்தாமல் விடார் என்றே பலரும் நம்பினர்.

அதுவே இப்போது நடக்கின்றது.

பதவியை விட்டு இறங்க முன்னர், நாட்டின் ஜனநாயக ஆட்சிக் கட்டமைப்பு முறைமைக்கு ஆப்பு வைத்து விட்டுதான் இறங்குவேன் என்று கங்கணம் கட்டிச் செயல்படுபவர் போல அவர் காரியமாற்றுகின்றார்.

இன்னும் 57 நாட்களில் ஜனாதிபதித் தேர்தல். இரண்டு மாதங்கள் கூட இல்லை.

அதற்குள் நாட்டின் ஜனநாயக கட்டமைப்பை சீன்னாபன்னமாக்கி விட்டுத் தான் அவர் ஓய்வார் போல தென்படுகின்றது.

தமது தற்போதைய பதவிக்காலத்தின் அந்தத்தில் இருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொலிஸ் மா அதிபர் நியமனம் தொடர்பான உயர் நீதிமன்ற தீர்ப்பை ஏற்க மாட்டேன் என்று அறிவித்து, உயர் நீதிமன்ற உத்தரவைக் கடாசி இருக்கின்றமை நாட்டின் ஜனநாயக கட்டமைப்புக்கு வைக்கப்பட்ட ஆப்பு.

நிறைவேற்றதிகாரம் சர்வாதிகாரத்தை தொட்டு, நாட்டை சீரழிக்கும் நடவடிக்கையில் வெளிப்பட்டு நிற்கின்றது.

நாட்டில் அறிவிக்கப்பட்டு, வேட்பு மனுக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பகுதி அளவு வாக்கு வீட்டுகளும் அச்சிடப்பட்டு விட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை, அவற்றுக்கான நிதியை நிதி அமைச்சர் என்ற அதிகாரத்தை வைத்து வெட்டி, அந்தத் தேர்தலை நிரந்தரமாக தடுத்தவர் ரணில் விக்கிரமசிங்க. அதன் மூலம் தேர்தலைக் கண்டு தொடை நடுங்கும் அரசியல்வாதி தாம் என்பதை மீண்டும் நிரூபித்தமை மட்டுமல்லாமல், தாம் ஜனநாயக விரோதி என்பதையும் அவர் அம்பலப்படுத்தினார்.

இப்போது உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்க முடியாது, என் இஷ்டப்படி செயற்படுவேன் என்று அறிவித்தமை மூலம் தாம் எதேச்சாதிகாரி, சர்வாதிகாரி, ஜனநாயகக் கட்டமைப்புகளின்ன் விரோதி என்பதை அவர் நிருபித்து இருக்கின்றார்.

தமக்கு எதிர்பாராமல் கிட்டிய இந்த ஆட்சியின் காலத்தில் இத்தகைய பெரும் குழப்பங்களை அவர் செய்தே தீருவார் -, செய்யாமல் பதவி விலகார் - என்பது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றே. அது அவரது பரவணிப் பண்புபியல்பு.

ஆனால் இந்த சர்வாதிகார போக்குக்கு - நீதித்துறையைக் குழி தோண்டிப் புதைத்து அட்டகாசம் பண்ணும் அதிகார வரம்பு மீறல் அடாவடித் தனத்துக்கு - பின்புலமாக முதுகு கொடுத்து நிற்பது "மொட்டுக்கட்சி தான் என்ற உண்மையும் மறைக்கப் படக்கூடியது அல்ல.

மொட்டுக்கட்சி வழங்கிய நாடாளுமன்றப் பலத்தை வைத்துக் கொண்டுதான் இந்த சர்வாதிகாரத் தனத்தை - எதிர்சாதிகாரத்தை - ரணில் விக்கிரமசிங்க முன்னெடுக்கின்றார் அதனால் இந்த ஜனநாயக விரோத போக்குக் குற்றத்தில் முக்கிய பங்காளி மொட்டுக்கட்சி தான். இந்தக் குற்றத்திற்கான பொறுப்பு கூறலில் மொட்டுக்கட்சிக்கும் பங்கு உள்ளது.

இத்தகைய ஜனநாயக விரோத குற்றங்களில் மொட்டுக் கட்சியின் குற்றச் சரித்திரம் பிரதம நீதியரசரான ஷிராணி பண்டாரநாயக்காவை அச்சுறுத்தி பதவியிலிருந்து கலைத்ததிலிருந்து தொடங்குகின்றது. அந்த அதிகார வரம்பு மீறிய அடாவடி குகைக்குள் ரணில் விக்ரமசிங்கவும் பதுங்கிக் கொண்டு அதே வேலையை தொடர்கின்றார்.



# சம்மாந்துறை பிரதேச சபை ஊழியருக்கு பயிற்சிப்பட்டறை



(எம்.எம்.றம்ஸீன்)

சம்மாந்துறை பிரதேச சபையில் பதிலீட்டு அடிப்படையில் நீண்ட காலமாக பணிபுரிந்து வந்த ஊழியர்களுக்கு அரசால் அண்மையில் நிரந்தர நியமனம் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிரந்தர நியமனத்தைப் பெற்ற ஊழியர்களுக்கு அலுவலக நிர்வாக நடைமுறை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பான பயிற்சிப்பட்டறை சம்மாந்துறை பிரதேச சபையின் செயலாளர் எம்.ஏ.கே.முஹம்மட் தலைமையில் பிரதான அலுவலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதில் சம்மாந்துறை பிரதேச சபையின் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எம்.சுல்பா உள்ளிட்ட ஊழியர்கள் கலந்து கொண்டனர்.




# உறுமய தேசிய வேலைத்திட்டத்தில் சிறப்பாகச் செயற்பட்டமைக்கு கணினி

(சர்ஜுன் லாபீர்)

உறுமய தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் சம்மாந்துறை பிரதேச செயலகம் அம்பாறை மாவட்டத்தில் சிறப்பாக செயற்பட்டமைக்காக அதனை கௌரவிக்கும் முகமாக 04 கணினிகள் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு பிரதேச செயலாளர் தேசபந்து எஸ்.எல் முஹம்மது ஹனீபா தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

ஜனதிபதியின் விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் தேசிய ரீதியாக சிறப்பாக செயற்பட்ட பிரதேச செயலகங்களுக்கு இந்தக் கணினி அன்பளிப்பு இடம்பெற்றது. அந்த வகையில் சம்மாந்துறை பிரதேச செயலகம் அம்பாறை மாவட்டத்தில் முதற்தரமாக செயற்பட்டமைக்காக இந்தக் கௌரவிப்பு வழங்கப்பட்டது.

உதவிப் பிரதேச செயலாளர் யூ.எம். அஸ்லமின் ஒழுங்குபடுத்தல் மற்றும் நெறிப்படுத்தலில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவிக்ரம பிரதம அதிதியாக கலந்து கொண்டு கணினி உபகரணங்களை வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் முன்னாள் அரச அதிபரும் சம்மாந்துறை நம்பிக்கையாளர் சபை தலைவருமான ஐ.எம் ஹனீபா, பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எப்.நபீரா, தேசிய அனர்த்த நிவாரண சேவை உத்தியோகத்தர் எம்.எஸ்.எம். அஸாருத்தீன், கிராம சேவகர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.



# சாய்ந்தமருது கலாசார நிலையத்தில் பாராட்டு மற்றும் கௌரவிப்பு நிகழ்வு





(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

புத்தசாசன மத மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சின் சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையம் ஏற்பாடு செய்து நடத்திய வருடாந்த பாராட்டு மற்றும் கௌரவிப்பு நிகழ்வு சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தின் பொறுப்பதிகாரி யூ.கே. எம். றிம்ஸான் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையின் முன்னாள் அதிபரும் ஓய்வுபெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளருமான ஏ. பீர்முகமது, சட்டத்தரணி சஹ்பி எச். இஸ்மாயில் ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்து கொண்டனர்.

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் மாவட்ட உத்தியோகத்தர் ரீ. எம். ரின்சான், பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எம்.என்.எம். ரம்ஸான், கிராம நிர்வாக உத்தியோகத்தர் எம்.எஸ்.எம். நளீர், பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்களான ஏ.எச். சபீகா, ஏ.எம். தௌபீக், அக்கரைப்பற்று கலாசார மத்திய நிலையப் பொறுப்பதிகாரி ஐ.எல். ரிஸ்வான், பிரதேச செயலக பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் ஏ.சீ.முஹம்மத், பிரதேச செயலக நிதி உதவியாளர் ஏ.சீ.றியாஸ், கலாசார மத்திய நிலைய நிறைவேற்றுக்குழு குழு உறுப்பினர்களான ஓய்வுபெற்ற கலாசார உத்தியோகத்தர் எம்.ஐ.எம்.அஷ்ரப், ஆசிரியர் எம்.ஐ.எம்.அமீர், மூத்த கலைஞர் எம். ஐ. அலாவுதீன், மத்திய நிலைய அபிவிருத்திச் சங்கச் செயலாளர் அஸ்வான் மௌலானா, பொருளாளர் ஏ.பி. நௌசாத் உட்பட கலைஞர்கள், எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள் மத்திய நிலைய மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில், கடந்த வருடம் கலாசார மத்திய நிலையத்தில் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட பாடநெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு, பாராட்டு, கௌரவம், நினைவுச் சின்னம் வழங்கும் வைபவங்களும் இடம்பெற்றன.

இதன் போது சுமார் 200 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டனர்.

நிகழ்வில், முக்கிய அம்சமாக சாய்ந்தமருதில் பிரதேச செயலாளராக இருந்து ஊரின் நலன் கருதி, தன்னலம் பாராது சேவையாற்றி அரும் பணியாற்றிவரும் சேவைச் செம்மல் பிரதேச செயலாளர் எம். எம். ஆசிக், மத்திய நிலையப் பொறுப்பதிகாரி யூ.கே. எம். றிம்ஸானால் நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.





# நானாட்டான் டிலாசால் கல்லூரி தடகளப் போட்டிகளில் சாதனை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மன்னார் கல்வி வலயத்துக்கு உட்பட்ட 82 பாடசாலைகள் கலந்து கொண்ட தடகள விளையாட்டு போட்டி நிகழ்வுகள் அண்மையில் முருங்கன் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போது மன்னார், நானாட்டான் டிலா சால் கல்லூரி பல படைத்த சாதனைகளைப் படைத்துள்ளது.

2023 ஆம் ஆண்டில் 151 புள்ளிகளை பெற்று பெண்கள் பிரிவில் ஒட்டுமொத்த புள்ளிகள் அடிப்படையில் முதலாம் இடத்தை இப்பாடசாலை பெற்றுக் கொண்டது. இந்த நிலையில் 2024 ஆண்டில் பெண்கள் பிரிவில் ஒட்டுமொத்த புள்ளிகள் அடிப்படையில் 191 புள்ளிகளைப் பெற்று சென்ற முறையை விட 40 புள்ளிகள் மேலதிகமாக பெற்று அதே முதல் நிலையை இந்தப் பாடசாலை தக்க வைத்துள்ளது .

ஆண்கள் பிரிவில் மொத்த புள்ளிகள் 99 பெற்று ஆண்கள் பிரிவில் 5 ஆம் நிலையைப் பெற்றுள்ளது.

20 வயது பெண்கள் பிரிவு வலைப் பந்தாட்டத்தில் முதலிடத்தையும், 18 வயது பெண்கள் பிரிவு வலைப்பந்தாட்டத்தில் இரண்டாம் இடத்தையும்,16 வயது பெண்கள் பிரிவு வலைப்பந்தாட்டத்தில் மூன்றாம் இடத்தையும்,20 வயது ஆண்கள் பிரிவு உதைபந்தாட்டத்தில் இரண்டாம் இடத்தையும்,16 வயது ஆண்கள் பிரிவு உதைபந்தாட்டத்தில் மூன்றாம் இடத்தையும் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.














# ஹப்பினஸ் குரூப் வெற்றி வாகை!

(என். ஹரன்)

யாழ்ப்பாணம், பாசையூர், சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தின் 90 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு இடம்பெற்ற உதைப்பந்தாட்ட மற்றும் மென்பந்து சுற்றுப் போட்டிகள் கடந்த வாரம் முதல் பல அணிகளுக்கு இடையில் பல சுற்றுக்களாக இடம்பெற்றன.

இவ்வாறு இடம்பெற்று வந்த உதைபந்தாட்ட மற்றும் மென்பந்து சுற்றுப் போட்டிகள் இரண்டிலும் இந்த முறையும் பாசையூர் ஹப்பினஸ் குரூப் வெற்றி வாகை சூடியது .

இந்தக் கழகம் உருவாக்கப்பட்டு 25 ஆண்டுகள் கடந்த பொழுதும் ஒற்றுமையே பலம் என்பதற்கு எடுத்துக் காட்டாக கடந்த பல வருடங்களாக இடம்பெற்றுவந்த உதைப்பந்தாட்ட போட்டிகளில் தொடர்ச்சியாகப் 11 தடவைகள் "ஹப்பினஸ் குரூப்" வெற்றிக் கிண்ணத்தை அள்ளிச் சென்றது. இந்தப் பகுதியில் 15 இற்கும் அதிகமான வெற்றிவாகை சூடிய அணி என்பதும் குறிப்பிடத்தக்கது.




# சாய்ந்தமருது ரியாழுல் ஜன்னா வித்தி. தளபாட கொள்வனவுக்கு நிதி ஒதுக்கீடு

(எம்.எம்.றம்ஸீன்)

திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவருமான எச். எம். எம்.ஹரீஸ் டி-100 வேலைத்திட்டத்தின் கீழ் ஜனாதிபதியின் விசேட நிதி ஒதுக்கீட்டில் பயனாக கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது ரியாழுல் ஜன்னா வித்தியாலய தளபாட கொள்வனவுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட ஆவணம் கையளிக்கப்பட்டது.

சாய்ந்தமருது ரியாழுல் ஜன்னா வித்தியாலய அதிபர் ஏ.எம். அஸ்தர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம். எம். ஹரீஸ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு ஒரு மில்லியன் ரூபவுக்கான நிதி ஒதுக்கீட்டு ஆவணத்தைக் கையளித்தார்.



# மட்டு. சிவானந்தா கல்லூரி மாணவன் மல்யுத்த போட்டிக்காக தாய்லாந்து பயணம்




(அஸ்ஹர் இப்றாஹிம்)

தாய்லாந்தில் நடைபெறும் சர்வ தேச மட்டத்திலான ஆசிய மல்யுத்த போட்டியில் கலந்து கொள்ள மட்டக் களப்பு, கல்லடி சிவானந்தா தேசிய கல்லூரி மாணவன் ஹரிபிரஷாத் மற்றும் பயிற்றுவிப்பாளர் திருச்செல் வம் ஆகியோர் தாய்லாந்து பயண மானார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்துக்கும் கல் லூரிக்கும் பெருமை பெற்றுத் தந்துள்ள ஹரிபிரஷாத் மற்றும் திருச்செல்வம் ஆகியோருக்கு கல்வி சமூகம் வாழ்த் துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளது.

இந்தப் போட்டிக்கு இலங்கையிலி ருந்து செல்லும் ஒரோயொரு தமிழர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.





1145 Morningside Ave Unit #33, Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998




# மன்னார் துள்ளுக்குடியிருப்பு அணி வட மாகாணக் கரபந்தாட்ட சம்பியன்

(வாஸ் கூஞ்ஞ)

வட மாகாண பாடசாலைகளுக்கு இடையில் 18 வயதுக்கு கீழ்ப்பட்ட ஆண்களுக்கான கரபந்தாட்டப் போட்டியில் மன்னார் துள்ளுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அணி சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

வட மாகாணத்தில் 2024 ஆம் ஆண்டு 18 வயது ஆண்களுக்கான கரபந்தாட்ட இறுதிப் போட்டி யாழ்ப்பாணம் ஆவரங்கால் நடராஜா இராமலிங்கம் வித்தியாலயத்தில் இடம் பெற்றது.

இந்த 18 வயது பிரிவுக்கு கீழ் ஆண்களுக்கான கரபந்தாட்டப் போட்டியில் 39 அணிகள் பங்குபற்றியிருந்தன.

இதில் இறுதிப் போட்டியில் மன்னார் துள்ளுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை மாணவர் அணியும் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி மாணவர் அணியும் இறுதிப் போட்டியில் மோதிக் கொண்டன.

இந்த இரு அணிகளுக்கான இறுதிப் போட்டியில் முதலாம் சுற்றில் 24 : 23 என்ற புள்ளி கணக்கில் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி வெற்றி பெற்றது.

இரண்டாம் சுற்றில் 24 : 18 என்ற புள்ளி கணக்கிலும், மூன்றாம் சுற்றில் 24 : 17 என்ற புள்ளிக் கணக்கிலும் மன்னார் துள்ளுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை மாணவர் அணி வெற்றி பெற்று 2024 ஆம் ஆண்டுக்கான சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

வட மாகாணத்துக்கான இவ்வாறான போட்டியில் 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டியில் மன்னார் துள்ளுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை மாணவர் அணி இரண்டாம் இடத்தையும் 2023 ஆம் ஆண்டு மூன்றாம் இடத்தையும் பெற்றிருந்த நிலையிலேயே மன்னார் துள்ளுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை மாணவர் அணி இந்த வருடம் 2024 சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

# கடற்கரையோடு அமைந்துள்ள திருகோணமலை மான் பூங்கா!

(ஹஸ்பர்)

திருகோணமலை மான் பூங்கா உலகின் கடற்கரையோரத்தில் மிகவும் இயற்கையான சூழல் திறந்த நகர மான் பூங்காவாக கொண்டாடப்படுகிறது.



மான்களின் இயற்கையான வாழ்விடத்தை ஆதரிக்கும் வகையில் பூங்காவின் சூழல் பராமரிக்கப்பட்டு, அவை சுதந்திரமாக சுற்றித் திரிவதற்கும் பார்வையாளர்களுடன் நிலையான முறையில் தொடர்பு கொள்வதற்கும் அனுமதிக்கிறது.

திருகோணமலை மான் பூங்கா தனிச்சிறப்பு வாய்ந்தது. இது திறந்த நகர மான் பூங்காக்களில் அதிக மான்களைக் கொண்டுள்ளது. திருகோணமலை நகரம் முழுவதும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மான்கள் உள்ளன. இந்த அதிக எண்ணிக்கையிலான மான்கள் ஒரு தனித்துவமான அம்சமாகும்.

பூங்காவில் உணவுக் கடை உள்ளது. பார்வையாளர்களுக்குப் பல்வேறு உணவு விருப்பங்களை வழங்குகிறது. இது பூங்காவின் சுற்றுச்சூழல் நட்பு கருப்பொருளுடன் ஒத்துப்போகிறது. கிடைக்கும் உணவு நிலையானது மற்றும் சுற்றுச்சூழல் உணர்வுடன் இருப்பதை உறுதி செய்கிறது. நாரா மான் பூங்காவுடன் ஒப்பிட்டு பார்க்கையில், ஜப்பானில் உள்ள நாரா மான் பூங்காவில், மான்களுக்கு அனுமதிக்கப்பட்ட ஒரே உணவான குறிப்பிட்ட சத்தான பிஸ்கட்டுகளை அரசு தயாரித்து விற்பனை செய்யும் இடத்தில், திருகோணமலை மான் பூங்காவில் இதுபோன்ற கட்டுப்பாடுகள் விதிக்கப்படவில்லை. நாராவில், இந்த பிஸ்கட்கள் விலை அதிகமாகவும் உள்ளது. என்றாலும் மான்களின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை உறுதிப்படுத்துகிறது அரசு. ஆனால் இயற்கை உண்ணி விலங்குகளுக்கு இயற்கையான உணவுகளை கொடுப்பதே அவற்றின் வாழ்வியலுக்கு சிறந்தது.

திருகோணமலை மான் பூங்கா தனித்து நிற்கிறது ஏனெனில் பார்வையாளர்கள் நுழைவதற்கு கட்டணம் இல்லை. இது பரந்த அளவிலான மக்களுக்கு அணுகக் கூடியதாகிறது.



# அரபா நகரில் பல்தேவைககான் கட்டடம் அமைக்க அடிக்கல் நட்ட ஹரீஸ் எம்.பி.!

(எம்.எம்.றம்ஸீன்)

திகாமடுல்ல மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் டி- 100 திட்டத்தின் கீழ் குடிவில் அறபா நகர் ஹாஜியார் புரத்தில் பல்தேவைக் கட்டடம் ஒன்று அமைப்பதற்கு அடிக்கல் நட்டு வைத்துள்ளார்.

ஜனாதிபதியின் விசேட நிதியொ துக்கீட்டின் மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ள டி- 100 வேலைத் திட்டத்தின் ஊடாக இந்தப் பல்தேவைக் கட்டடம் 5 மில்லியன் நிதியில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

குடிவில் அறபா நகர் ஹாஜியார் புறம் பள்ளிவாசல் தலைவர் எம்.அனீஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம். எம். ஹரீஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பல்தேவைக் கட்டடத்துக்கான அடிக்கல்லை நட்டுவைத்தார்.

இந்நிகழ்வில் முன்னாள் இறக்காமம் பிரதேச சபை தவிசாளர் எம்.ஐ நைசர், இறக்காமம் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர்களான கட்சியின் உயர் பீட உறுப்பினர் என்.எம். ஆஸீக், எம்.எல். முஸ்னி, ஆசிரியர் எம்.ஜிப்ரி, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர் எம்.றியாஸ், கட்சியின் அமைப்பாளர் எஸ்.எல் நிசார், குடிவில் மத்திய குழு செயலாளர் எம். சுபைத்தீன், வாங்காமம் பிரதேச கட்சியின் அமைப்பாளர் எம்.பர்கான், குடியில் ஜும்மா பள்ளிவாசல் தலைவர் எம். சுபைர், நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேக செயலாளர் நௌபர் ஏ. பாவா, கிராம சேவகர் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.



# தேசிய மட்ட ரெனிஸ் போட்டிக்கு தெரிவானது சுண்டுக்குளி மகளிர்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

வட மாகாண ரெனிஸ் போட்டிகளில் இரு பிரிவுகளில் முதலிடங்களைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு யாழ்ப்பாணம், சுண்டிக்குளி பெண்கள் கல்லூரி தெரிவாகியுள்ளது.

வட மாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான 17 மற்றும் 20 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான ரெனிஸ் போட்டியில் யாழ்ப்பாணம், சுண்டிக்குளி பெண்கள் கல்லூரி சம்பியன்களாக தெரிவுசெய்யப்பட்டுதேசியமட்டபோட்டியில் பங்கேற்கும் வாய்ப்பை பெற்றுள்ளது.

இந்தப்போட்டிசுண்டிக்குளிபெண்கள் கல்லூரி ரெனிஸ் மைதானத்தில் இடம்பெற்றது.



# சுங்கவரி பணிப்பாளர் நாயகத்துடன் கிழக்கு மாகாண ஆளுநர் சந்திப்பு!





**(எஸ்.கீதபொன்கலன்)**

கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான செந்தில் தொண்டமானின் ஏற்பாட்டில் சுங்கவரி பணிப்பாளர் நாயகம், அகில இலங்கை நகை வியாபாரிகளின் சம்மேளன தலைவர், கல்முனை வர்த்தக சங்கத்தினர் ஆகியோருக்கு இடையில் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் போது சுங்கவரி திணைக்களத்தால் மேற்கொள்ளப்படும் திடீர் சோதனைகளால் நகைக்கடை உரிமையாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்தும், இதனால் நகைக்கடை தொழிலாளர்கள் பாதிக்கப்படுவதாகவும் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

விமான நிலையம் ஊடாகவும், துறைமுகங்கள் ஊடாகவும் வெளிநாடுகளில் இருந்து தங்கம் கடத்தப்படுகிறது. சுங்கவரி திணைக்களத்தினர் இவ்விரு இடங்களிலும் அவர்களது சோதனைகளை துரிதப்படுத்தினால் சட்டவிரோதமான செயற்பாட்டைத் தடுக்க முடியும். மாறாக தவறுகள் செய்யாத நகைக் கடைகளை சோதனை செய்வது ஏற்க கூடியதல்ல என செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் காலங்களில் நகை கடை தொழிலாளர்கள் பாதிக்கப்படாத வகையில் இச்சோதனைகள் அமைய வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

வருமான வரி திணைக்களத்தினர் சோதனைகள் மேற்கொள்ளும் போது முன் அறிவித்தலுடன் தகுந்த ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு சோதனைகள் நடத்தப்படுகின்றன.

ஆனால் சோதனைகளில் ஈடுபட்டுள்ள சுங்கவரி திணைக்களத்தினர் சோதனைகள் மேற்கொள்ளப்படும் போது எவ்வித அறிவித்தலுமின்றி சோதனை மேற்கொள்வதால் நகை கடை தொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

எனவே சுங்கவரி திணைக்களம் எவ்வாறான ஆவணங்கள் தேவை என்பதை அகில இலங்கை நகை வியாபாரிகளின் சம்மேளனத்துக்கு அறிவித்தால் அவர்கள் நகைக்கடை வியாபாரிகளுக்கு அறிவித்து சோதனையின் போது தேவையான ஆவணங்களை தயார் நிலையில் வைத்திருக்க முடியும் என சுங்கவரி பணிப்பாளர் நாயகத்திடம் செந்தில் தொண்டமான் சுட்டிக்காட்டினார்.

# காலாவதியான மருந்துப் பொருள்கள் கிண்ணியா மருந்தகங்களில் மீட்பு!

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

கிண்ணியா பிரதேசத்தில் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை உத்தியோஸ்தர்கள் மருந்தகங்களில் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பில் 6 மருந்தகங்களில் இருந்து காலாவதியான மருந்துப் பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

கிண்ணியா பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் காலாவதியான மருந்துப் பொருள்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் அதிகாரிகள் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பில் 6 மருந்தகங்களுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது என்று சபையின் உயர் அதிகாரிகாரி ஒருவர் தெரிவித்தார்.

திருகோணமலை நீதிவான் நிதிமன்றத்தில் கடந்த புதன் கிழமை (24) வழக்கு தொடரப்பட்ட நிலையில், தலா 10 ஆயிரம் ரூபா தண்டப்பணமும், 10 வருட ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையும் வழங்கிய நீதிவான், மீண்டும் ஒரு முறை இக்குற்றத்தை செய்யுமிடத்து 10 வருட சிறைத்தண்டனை வழங்கப்படும் என மன்றில் தெரிவித்தார்.

# கடந்த கால தவறுகளில் இருந்து பாகிஸ்தான் இன்னும் பாடம் கற்கவில்லை என்கிறார் மோடி

## தீயநோக்கத்துடன் இந்தியாவை அணுகினால் தக்க பதிலடி நடக்குமாம்



(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)

"கடந்த கால தவறுகளில் இருந்து பாகிஸ்தான் இன்னும் பாடம் கற்கவில்லை. தீயநோக்கத்துடன் இந்தியாவை அணுகினால், இந்திய இராணுவ வீரர்கள் தங்களின் முழு பலத்துடன் தீவிரவாதத்தை நசுக்குவார்கள். எதிரிகளுக்கு தகுந்த பதிலடி கொடுக்கப்படும்." என்று கார்கில் போர் வெற்றியின் 25 ஆவது நினைவு தினத்தில் பிரதமர் நரேந்திர மோடி பேசினார்.

கார்கில் போர் வெற்றியின் 25 ஆவது நினைவு தினம் இன்று இந்தியா முழுவதும் கொண்டாடப்படும் நிலையில் அப்போரில் இன்னுயிர் நீத்த இராணுவத்தினருக்கு பிரதமர் நரேந்திர மோடி வீரவணக்கம் செலுத்தினார். ஜம்மு காஷ்மீரின் கார்கில் மாவட்டம் டிராஸ் பகுதியில் உள்ள கார்கில் போர் நினைவிடத்தில் பிரதமர் மோடி வீரவணக்கம் செலுத்தினார்.

இதன்பின் போர் நினைவிடத்தில் பிரதமர் மோடி பேசுகையில், "இன்று, லடாக்கின் இந்த மாபெரும் நிலம், கார்கில் வெற்றியின் 25 ஆவது ஆண்டு விழாவைக் காண்கிறது. தேசத்துக்காக செய்த தியாகங்கள் அழியாதவை என்பதை கார்கில் வெற்றி நமக்குச் சொல்கிறது.

கடந்த கால தவறுகளில் இருந்து பாகிஸ்தான் இன்னும் பாடம் கற்கவில்லை. கடந்த காலங்களில் பாகிஸ்தான் தனது அனைத்து மோசமான முயற்சிகளிலும் தோல்வியே கண்டது. ஆனாலும், அவற்றில் இருந்து எதையும் பாகிஸ்தான் கற்றுக்கொள்ளவில்லை. தொடர்ந்து தீவிரவாதம் போன்ற செயல்களில் ஈடுபடுகிறது. தீவிரவாதிகள் என் குரலை நேரடியாகக் கேட்கும் இடத்திலிருந்து இன்று நான் பேசுகிறேன். தீவிரவாதத்தின் ஆதரவாளர்களே... உங்களின் மோசமான நோக்கங்கள் எதுவும் வெற்றியடையாது. தீயநோக்கத்துடன் இந்தியாவை அணுகினால், இந்திய இராணுவ வீரர்கள் தங்களின் முழு பலத்துடன் தீவிரவாதத்தை நசுக்குவார்கள். எதிரிகளுக்கு தகுந்த பதிலடி கொடுக்கப்படும்.

அக்னிபாத் திட்டத்தின் குறிக்கோள், இந்திய இராணுவத்தை இளமையாக வைத்திருப்பதுதான். இராணுவத்தை தொடர்ந்து போருக்குத் தகுதியாக வைத்திருப்பதே அக்னிபாத் திட்டத்தின் நோக்கம். துரதிர்ஷ்டவசமாக, சிலர் தேசிய பாதுகாப்பு தொடர்பான இத்தகைய உணர்ச்சிகரமான பிரச்சினையை அரசியலில் கலக்கின்றனர். சிலர் தங்களின் சொந்த அரசியல் நலனுக்காக இராணுவத்தின் சீர்திருத்தத்திலும் அரசியல் செய்கின்றனர். பல ஆயிரம் கோடி மோசடி செய்து நமது ராணுவத்தை பலவீனப்படுத்தியது இவர்கள்தான்.

# அமெ. செல்கின்றார் முதல்வர் ஸ்டாலின்!



**சென்னை, ஜூலை 26**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 15 நாள்கள் வெளிநாடு சென்று வர மத்திய அரசு அனுமதி வழங்கி உள்ளது.

தமிழ்நாட்டுக்கு தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இந்த மாதம் அமெரிக்கா செல்வதற்கான ஏற்பாடுகள் நடந்து வந்தது. பின்னர் பல்வேறு காரணங்களால் அவர் அமெரிக்கா செல்லும் திகதி மாற்றப்பட்டது. வருகிற சுதந்திர தினத்தன்று ஆகஸ்ட் 15 ஆம் திகதி கோட்டையில் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தேசியக்கொடியேற்ற உள்ளார். அதன்பின்னர், ஓகஸ்ட் 22-ஆம் திகதி அவர் அமெரிக்காக செல்ல உள்ளார் எனத் தகவல் வெளியானது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அமெரிக்கா செல்வதற்காக மத்திய அரசிடம் அனுமதி கோரப்பட்டது. மத்திய அரசு அனுமதி வழங்கி உள்ளது. இதைத் தொடர்ந்து முதலமைச்சரின் பயண திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் வெளிநாடு செல்வதற்கு முன்பாக தமிழக அமைச்சரவையில் மாற்றம் இருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இந்த முறை துணை முதலமைச்சராகி விடுவார் என்று மீண்டும் தகவல்கள் வெளியாகி வருகின்றன. சுதந்திர தினத்துக்கு பிறகு ஓரிரு நாளில் அமைச்சரவை மாற்றம் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




# பிரான்ஸில் இன்று ஒலிம்பிக் ஆரம்பம்

## பாரிஸில் சாலையோரம் வசித்த மக்கள் முகாம்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டனர்

**பாரிஸ், ஜுலை 26**

ஒலிம்பிக் போட்டிகள் முடியும் வரை சாலையோரம் வசித்த மக்களை தற்காலிக முகாம்களில் தங்க வைக்க பிரான்ஸ் அரசு முடிவு செய்துள்ளது.

உலகமே ஆவலோடு எதிர்நோக்கும் 33 ஆவது ஒலிம்பிக் விளையாட்டு போட்டி பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் இன்று கோலாகலமாக தொடங்குகிறது.

வழக்கத்திற்கு மாறாக இந்த முறை தொடக்க விழாவை மைதானத்தில் இல்லாமல், பாரீசின் புகழ்பெற்ற சென் நதி கரையில் நடத்துகிறார்கள். ஒலிம்பிக் வரலாற்றில் தொடக்க விழா ஸ்டேடியத்திற்கு வெளியே நடத்தப்படுவது இதுவே முதல்முறையாகும். இதையொட்டி அங்கு பிரமாண்டமான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஒலிம்பிக் போட்டிகளால் பாரிஸ் நகரமே விழாக்கோலம் பூண்டுள்ளது.

இதனிடையே, பாரிஸ் நகரங்களில் வீடுகள் இன்றி சாலையோரம் வசித்த மக்களை அங்குள்ள பாதுகாப்பு படையினர் அப்புறப்படுத்தி வருகின்றனர். சாலையோரம் வசித்தவர்களில் பெரும்பாலானோர் ஆப்பிரிக்காவில் இருந்து புலம் பெயர்ந்து வந்தவர்கள் ஆவர். ஒலிம்பிக் போட்டிகள் முடியும் வரை இவர்களை தற்காலிக முகாம்களில் தங்க வைக்க பிரான்ஸ் அரசு முடிவு செய்துள்ளது. பிரான்ஸ் அரசின் இந்த முடிவுக்கு எதிர்ப்புகளும் கிளம்பியிருக்கின்றன.

# எய்ட்ஸ் நோய்க்குத் தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்பட்டதாக அறிவிப்பு

**கேப் டவுன், ஜுலை 26**

எச்.ஐ.வி. தடுப்பு மருந்து கண்டுபிடிப்புக்காக நடத்தப்பட்ட ஆய்வு ஒன்று 100 சதவீத செயல்திறனைக் காட்டியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

உலகம் முழுவதும் எய்ட்ஸ் நோய்க்கு காரணமான எச்.ஐ.வி. தொற்றால் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த எச்.ஐ.வி. தொற்றுப் பாதிப்புக்கு நிரந்தர தீர்வு காணும் மருந்துகளை கண்டுபிடிக்கும் பணியில் மருத்துவ ஆய்வாளர்கள் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.




இந்த நிலையில் தென்னாப்பிரிக்காவின் கேப் டவுன் பல்கலைக்கழகத்தின் எச்.ஐ.வி. மையத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், எச்.ஐ.வி. தடுப்பு மருந்து கண்டுபிடிப்புக்காக நடத்தப்பட்ட ஆய்வு ஒன்றில் 100 சதவீத செயல் திறனைக் காட்டியுள்ளது தெரியவந்துள்ளது.

ஆண்டுக்கு 2 முறை (6 மாதத்துக்கு ஒன்று) ஊசி மூலமாக செலுத்தப்படும் இந்த மருந்து மூலமாக எச்.ஐ.வி. தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்து விரைவில் குணமடையும் சாத்திய கூறுகள் இருப்பதாக தெரியவந்துள்ளது. எச்.ஐ.வி.யால் இளம்பருவ பெண்களை கொண்டு நடத்தப்பட்ட 3 கட்ட சோதனையின் மூலம் இது நிருபணமாகி உள்ளதாக அந்த ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் பலகட்ட ஆராய்ச்சிகளுக்கு பின்னரே சோதனையின் வெற்றியை பொறுத்து இந்த மருந்து விற்பனை சந்தைக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடா முரசு

பக்கங்கள் 08

வெள்ளிக்கிழமை 26/07/2024

## நோயாளியைத் தகாத முறையில் தொட்ட பல் மருத்துவர் சிக்கலில்

ஒன்ராரியோ, ஜூலை 26 டொரன்டோ பகுதியில் உள்ள பல் மருத்துவர் ஒருவர் நோயாளியை இரண்டு முறை தகாத முறையில் தொட்டார் 02



# ஜோ பைடனின் கதிதான் ஜஸ்டின் ட்ரூடோவுக்கும்?

அமெரிக்காவில் ஜோ பைடன் ஜனாதிபதி தேர்தலிலிருந்து விலகி விட்டார். கனடாவில் ஜஸ்டின் ட்ரூடோவும் அதே போல விலகுவாரா என ஊடகங்கள் கேள்வி எழுப்பியுள்ளன.

கட்சிக்குள் ஜஸ்டின் ட்ரூடோவின் இடத்தைப் பிடிக்கப்போவது யார், மார்க் கார்னியா, கிறிஸ்டியா ஃப்ரீ லேண்டா அல்லது டொமினிக் லி ப்ளாங்கா எனக் கேள்வி எழுப்பியுள்ளன கனேடிய ஊடகங்கள். 02




# இலங்கையிலும் பங்களாதேஷிலும் பெரும்மோசடியில் கனடிய நிறுவனம்

இலங்கையில் பாரியளவிலான நிதி மோசடியில் ஈடுபட்டதாக கனடிய நிறுவனம் ஒன்றின் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கனடிய நிதி நிறுவனம் ஒன்று இலங்கை மற்றும் பங்களாதேஷ் மக்களிடம் பாரிய அளவிலான நிதி மோசடி செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவின் முன்னணி ஊடகம் ஒன்று இது தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ளது.

சுமார் இரண்டு பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரையில் இலங்கை மற்றும் பங்களாதேஷ் மக்களிடமிருந்து மோசடி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மீட்டவர்ஸ் பொரிங் 02

# வாடிக்கையாளர்களை ஏமாற்றி வந்த போலி மஸாஜ் நிபுணர் மாட்டினார்!

கனடாவில் வாடிக்கையாளர்களை பல ஆண்டுகளாக ஏமாற்றி வந்த தசைப்பிடிப்பு (மஸாஜ்) மற்றும் அக்குபஞ்சர் நிபுணர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சான்றிதழ் பெற்ற தசை பிடிப்பாளர் எனவும் அக்குபஞ்சர் நிபுணர் எனவும் அந்தப் பெண் போலியாகத் தமது வாடிக்கையாளர்களை ஏமாற்றியுள்ளார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கடந்த நான்கு ஆண்டுகளாக அந்தப் பெண் வாடிக்கை யாளர்களிடம் சுமார் 37,000 டொலர்களைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

ஹால்டன் பிராந்திய பொலிஸார் இந்தப் பெண் தொடர்பிலான விசாரணைகளை கடந்த ஜனவரி மாதம் ஆரம்பித்துள்ளனர்.

பதிவு செய்யப்பட்ட தசைப்பிடிப்பு நிபுணர் என தன்னை அடையாளப்படுத்தி இந்தப் பெண் வாடிக்கையாளர்களுக்கு சேவை வழங்கியுள்ளார்.

அனுமதி பத்திரம் இன்றி இவர் பிசியோதெரபி மற்றும் அக்குபஞ்சர் சிகிச்சைகளை அளித்து வந்தார் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.



49 வயதான மாவிச் அகமத் என்ற பெண்ணே இந்த குற்றச்சாட்டின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்தப் பெண்ணுக்கு எதிராக 13 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. மோசடியான முறையில் வாடிக் கையாளர்களிடம் பணம் பெற்றுக் கொண்டார் எனக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.



## நோயாளியைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனக் கூறப்படும் பாலியல் வன்கொடுமைக் குற்றசாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

வியாழக்கிழமை வெளியிடப்பட்ட செய்தி வெளியீட்டில், டர்ஹாம் பிராந்திய பொலிஸார் பாதிக்கப்பட்ட பெண் ஜூலை 13 அன்று அஜாக்ஸில் உள்ள ரோஸ்லேண்ட் மற்றும் சேலம் சாலைகளுக்கு அருகிலுள்ள கேசி பல் மருத்துவத்தில் சிகிச்சைக்காக சென்றார் எனத் தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட பெண் தனது இரண்டு சந்திப்புகளின் போது பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டார் எனப் பொலிஸார் குற்றம் சாட்டுகின்றனர்.

36 வயதான சுனில்குமார் படேல் என பொலிஸாரால் அடையாளம் காணப்பட்ட பல் மருத்துவர் மீது இரண்டு பாலியல் வன்கொடுமை குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு, தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டார்.

மார்கம் ரோடு மற்றும் லோரன்ஸ் அவென்யூவிற்கு அருகிலுள்ள ஸ்கார் பரோவில் உள்ள பெமிலி ஸ்மைல் பல் சிகிச்சை நிலையத்தில் படேலும் பணிபுரிகிறார் என்றும், மேலும் பாதிக்கப்பட்டவர்கள் இருக்கலாம் என்று நம்புவதால் பொலிஸாரைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள் ளப்பட்டுள்ளது.

## ஜோ பைடனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்காவில் ஜோ பைடன் விலகக் காரணமாக அமைந்தது அவரது வயது. ஆனால், ட்ரூடோவுக்கு அப்படியல்ல.

ட்ரூடோ தலைவராக இருந்தால் அடுத்த தேர்தலில் அவர் சார்ந்த லிபரல் கட்சி வெற்றி பெறுவது கடினம் என அவரது கட்சியினரே கூறுகிறார்கள்.

ஆகவே, அவர் இராஜினாமா செய்ய வேண்டும் என அவரது கட்சியைச் சேர்ந்தவரான Wayne Long என்னும் நாடாளுமன்ற உறுப்பினர் வெளிப்படையாகவே அழைப்பு விடுத்துள்ளார்.

குறிப்பாக, லிபரல் கட்சியின் கோட்டையான ரொரன்றோவின் சின் போல்ஸ் தொகுதியில் அக்கட்சி படுதோல்வி அடைந்த விடயம், மக்கள் ட்ரூடோ கட்சியை ஆதரிக்க விரும்பவில்லை எனக் காட்டியுள்ளது.

ஆக, ட்ரூடோ பிரதமராக நீடித்தாரென்றால், அடுத்த தேர்தலில் லிபரல் கட்சி வெற்றி பெறாது என்ற கருத்து கட்சியினரிடையே உருவாகியுள்ளது.

ஆக, இது வெறும் ஒரு தொகுதியின் தோல்வியா அல்லது ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல, நாடு முழுவதும் இந்த நிலை தான் காணப்படுகிறது என்று காட்டும் கண்ணாடியா என்பது தெரியவில்லை.

ஜோ பைடனைப்போல ஜஸ்டின் ட்ரூடோவும் விலகவேண்டி வருமா? காலம்தான் இந்தக் கேள்விகளுக்கு பதில் சொல்லவேண்டும்.

## இலங்கையிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எக்சேன்ஜ் குரூப் (Metaverse Foreign Exchange Group Inc) என்ற MTFE நிறுவனத்தின் தலைமையகம் கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தின் மார்க்கம் பகுதியில் அமைந்துள்ளது.

இந்த நிறுவனம் கனடாவின் நிதிச் சலவை கண்காணிப்பு நிறுவனம் உள்ளிட்ட பல்வேறு பதிவுகளையும் சரியான முறையில் மேற்கொண்டுள்ள ஓர் சட்ட ரீதியான நிறுவனம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் கடந்த 2023 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதல் இந்த நிறுவனத்தின் இணையத்தளம் செயலிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிறுவனத்தில் முதலீடு செய்த இலங்கையர்கள் குறித்த நிதி முதலீட்டுச் சேவை செயலிழந்து உள்ளதாக குற்றம் சுமத்தி இருந்தனர்.

இந்த MTFE நிறுவனம் ஓர் பிரமிடு மோசடித் திட்ட நிறுவனம் என இலங்கை மத்திய வங்கி பட்டியலிட்டுள்ளது.

பங்களாதேஷிலும் இதே விதமாக சுமார் ஐந்து லட்சம் மக்கள் இந்த நிறுவனத்தில் முதலீடு செய்து பணத்தை இழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் சுமார் ஒரு பில்லியன் டொலர் வரையில் மோசடி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மோசடிகள் தொடர்பில் இலங்கையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது.


இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று சந்தேக நபர்களை இலங்கை அதிகாரிகள் கைது செய்திருந்தனர்.

நிதிச்சலவையில் ஈடுபட்டதாக இந்த சந்தேக நபர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் இயங்கிய நிறுவனத்தின் 900,000 டொலர் பணம் முடக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கிறிப்டோ நாணயங்கள் உள்ளிட்ட பல்வேறு நாணயக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலான முதலீட்டுத் திட்டத்தில் இவ்வாறு இலங்கை மற்றும் பங்களாதேஷ் பிரஜைகள் பணத்தை முதலீடு செய்திருந்தனர்.

இந்த கனடிய நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் மோசடியின் பிரதான சூத்திரதாரிகள் யார் என்பது பற்றிய விவரங்கள் வெளியிடப்படவில்லை.



# விக்கிரமபாகு கருணாரத்னவிற்கு கனடிய தமிழர் பேரவை இரங்கல்

ஒன்ராரியோ, ஜூலை 26

கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்னவின் மறைவிற்கு கனடிய தமிழர் பேரவை இரங்கல் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கனடியத் தமிழர் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் -

'நவசமசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன அவர்கள் ஜூலை 25, 2024 அன்று கொழும்பில் காலமானமையை ஒட்டி கனடிய தமிழர் பேரவை ஆழ்ந்த வருத்தத்தை வெளிப்படுத்துகிறது.

Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Tamil Canadians"

கலாநிதி கருணாரத்ன, தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்றது இனப்படுகொலை என சர்வதேச அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும் என்றும், தமிழருக்கான ஒரு சுதந்திர அரசை அங்கீகரிக்க வேண்டும் என்றும் உருக்கமாக வாதிட்டவராவார்.

கலாநிதி கருணாரத்னவின் உறுதியான அர்ப்பணிப்பும் துணிச்சலான முயற்சிகளும் தமிழ் சமூகத்திற்கும், இலங்கையில் சமத்துவத்திற்கும் மற்றும் சமாதானத்திற்குமான பரந்த தேடலில் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

அவரது குடும்பத்தார், நண்பர்கள் மற்றும் அவரது அற்புதமான வாழ்க்கையில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.' - என்று உள்ளது.

# கனேடியத் தமிழ் குடும்பத்தை அனலைதீவில் தாக்கி கொள்ளையிட்ட சூத்திரதாரியான பெண் கைதானார்

யாழ்ப்பாணம் அனலைதீவில் கனேடிய தமிழ் குடும்பம் மீது வன்முறை கும்பலொன்று நடாத்திய தாக்குதல் மற்றும் கொள்ளைச் சம்பவம் தொடர்பான பிரதான சந்தேக நபரான பெண் ஒருவர் ஒரு வருடத்தின் பின்னர் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

பரந்தன் பகுதியில் உள்ள பெண்ணொருவரே யாழ்ப்பாணப் பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

அனலைதீவில் கடந்த வருடம் பெப்ரவரி மாதம் 23ஆம் திகதி நள்ளிரவு - அடுத்த நாள் அதிகாலை - கனேடிய தமிழ் குடும்பமொன்றின் மீது வன்முறை கும்பலொன்று வாள் வெட்டு தாக்குதலை நடத்தியதுடன், பெருமளவு வெளிநாட்டு நாணயம் மற்றும் பொருள்கள், நகைகள், கடவுச் சீட்டுகள் என்பவற்றைக் கொள்ளையடித்துச் சென்றது.

கனடிய தமிழரான நாகலிங்கம் சுப்பிரமணியம், அவரது மனைவி ஆகியோர் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஊர்காவற்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்ததுடன் மூன்று பேர் கைதுசெய்யப்பட்டனர்.

அதேவேளை பிரதான சந்தேக நபரை தேடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.



இந்நிலையில் ஒரு வருடத்திற்கு பின்னர் இந்தச் சம்பவத்தை வெளிநாட்டில் உள்ள ஒருவரின் பணிப்பில் உள்ளூரில் வழிநடத்தியவர் எனக் கருதப்படும் பெண் கைது செய்யப்பட்டார்.

அந்தப் பெண்ணிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது கனடாவில் உள்ள ஐயப்பன் கோயிலொன்றின் தலைவர் சொல்லியே தாக்குதல் நடத்தியதாகத் தெரிவித்தமையுடன் அதற்குரிய ஆதாரங்களையும் சமர்பித்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தப் பெண் சில குற்ற சம்பவ வழக்குகளுடன் தொடர்புடையவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட பெண் சந்தேக நபர் ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது 48 மணி நேரம் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்க நீதிவான் அனுமதியளித்தார்.

இந்தத் தாக்குதலை கனடா ஸ்ரீ ஐயப்பன் சமாஜம் கண்டித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டு இருந்தது. ஆலயத்தின் குருசாமியும் போஷகருமான நாகலிங்கம் சுப்பிரமணியம் மீதான தாக்குதல் அனைவரையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. கனடிய அரசும் இலங்கை பொலிஸும் இணைந்து இந்தத் தாக்குதலுக்குப் பொறுப்பானவர்களை அடையாளம் கண்டு கைது செய்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# அல்பர்ட்டாவில் கட்டுக்கு அடங்காமல் எரிந்து வரும் காட்டுத்தீயைக் கட்டுப்படுத்த இராணுவம் அழைப்பு!

அல்பேர்ட்டார, ஜூலை 26

கனடாவின் அல்பேர்ட்டா மாகாணத்தில் நிலவி வரும் காட்டுத்தீயை கட்டுப்படுத்த இராணுவத்தின் உதவி கோரப்பட்டுள்ளது.

அல்பேர்ட்டா மாகாணத்தின் கோரிக்கைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

அல்பேர்ட்டா மாகாணத்தில் கடுமையான காட்டுத்தீ வேகமாக பரவி வருகிறது.

வடக்கு அல்பர்ட்டா பகுதியில் ஏற்பட்டுள்ள காட்டுத் தீ, கட்டுக்கு அடங்காத நிலையில் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜெஸ்பர் தேசிய பூங்கா உள்ளிட்ட பகுதிகள் இதனால் பெரும் ஆபத்தில் உள்ளன.

இந்தக் காட்டுத் தீயை எதிர்கொள்வதற்கு கனடிய இராணுவத்தின் உதவி உடனடியாக அனுப்பி வைக்கப்படுவதாக பிரதமர் கூறியுள்ளார்

அல்பேர்ட்டா மாகாணம் கோரிய ஏனைய அவசர உதவிகள் வழங்கப்படும் எனவும் அவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

புதன்கிழமை பிற்பகல் நிலைவரப்படி, மாகாணத்தின் வன பாதுகாப்பு பகுதியில் 176 காட்டுத் தீ எரிகிறது.

இதில் ஜெஸ்பர் தேசிய பூங்காவை அச்சுறுத்தும் இரண்டு காட்டுத்தீ உள்ளடக்கப்படவில்லை.

காட்டுத்தீ மோசமான நிலையை அடைந்துள்ளதாக மாகாண அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மாகாணம் முழுவதிலும் காட்டுதீயினால் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அல்பர்ட்டா மாகாண பொது பாதுகாப்பு அமைச்சர் மைக் டெலிஸ் தெரிவித்துள்ளார்.

காட்டுத்தீயை கட்டுப்படுத்துவதற்கு உதவிகளை வழங்குமாறு மத்திய அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

கனடிய ராணுவ படையினரை உதவிக்கு அனுப்புமாறும் ராணுவ வளங்களை தந்து உதவுமாறும் கோரப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

# சுயநினைவு இழந்தமையால் தம் வாகனத்தை மோத விட்ட அமைச்சர் மன்னிப்புக் கேட்டார்

ஒன்ராரியோ, ஜூலை 26

குழந்தை பராமரிப்பு மையத்தின் மீது வாகனத்தை மோதிய சம்பவம் தொடர்பில் மாகாண அமைச்சர் அன்ரியா கன்ஜின் அம்மையார் மன்னிப்புக் கோரியுள்ளார்.

ஒன்ராரியோ மாகாண சபை உறுப்பினர் சுயநினைவு இழந்த சம்பவம் கடந்த வாரம் நிகழ்ந்தது.

பெர்ரி-இன்னிஸிபி மாகாண சபை உறுப்பினர் அன்ரியா கன்ஜின் தனது வாகனத்தை கைடிங் ஸ்டார்ஸ் குழந்தை பராமரிப்பு நிலைய கட்டடத்தின் மீது மோதியுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை நிகழ்ந்த இந்த சம்பவத்தில் எவருக்கும் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை.

அன்ரியா கன்ஜன், ஒன்ராரியோ மாகாண சுற்றுச்சூழல் அமைச்சராவார்.

தனியார் இடத்தில் இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளதாக உறுதிப்படுத்திய பொலிஸார் இதில் குற்றச்சாட்டுக்கள் எதுவும் சுமத்தப்படாது எனவும் கூறினர்.

இந்த சம்பவத்தின் பின்னர் மாகாண சபை உறுப்பினரின் நடவடிக்கை குறித்து குழந்தை பராமரிப்பு மையத்தின் பணியாளர்கள் விரக்தி அடைந்துள்ளனர்.

இந்த விபத்து நிகழ்ந்தவுடன் அன்ரியா கன்ஜின் குழந்தை பராமரிப்பு மையத்திற்குச் சென்று சேதத்தை பார்வையிட்டுள்ளார்.

ஆனால் அவரது அலுவலகம் அதே தொகுதியில் இருந்த போதிலும், சம்பவ தினத்தின் பின்னர் மாகாண சபை உறுப்பினர் குழந்தை பராமரிப்பு மையத்திற்கு நேரடியாக செல்லவில்லை என பணியாளர்கள் தெரிவித்தனர்.

கர்ப்பிணியான தான், அலுவலகத்தில் வாகனத்தை நிறுத்த முனைந்த போது சுயநினைவு இழந்ததாக குழந்தை பராமரிப்பு மையத்திற்கு அனுப்பிய கடிதத்தில் அன்ரியா கன்ஜின் குறிப்பிட்டுள்ளார்.

# லிபரல் கட்சி ஆட்சியில் குற்றங்கள் அதிகரிப்பு!

## கன்சர்வேடிவ் தலைவர் காட்டம்

ஒன்ராரியோ, ஜூலை 26

தேசிய அளவில் குற்றங்களின் அதிகரிப்பு மற்றும் சமீபத்தில் ஒன்ராறியோ இளைஞன் கொல்லப்பட்டமை என்பன லிபரல் மற்றும் புதிய ஜனநாயகக் கட்சியின் கொள்கைகளின் தோல்வியை வெளிப்படுத்துவதாக கன்சர்வேடிவ் தலைவர் பியர் பொய்லியேவ் தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக முக்கிய வாக்கெளிப்புகளில் லிபரல் கட்சிக்கு ஆதவராக புதிய ஜனநாயகக் கட்சி வாக்களித்து வருவதனையும் அவர் சுட்டிக்காட்டினார்.

'இது மீண்டும் மீண்டும் அதே வன்முறை குற்ற வாளிகளை விடுவிக்க அனுமதிக்கிறது.' என அவர் குறிப்பிட்டார்.

பொலிஸாரால் அறிவிக்கப்பட்ட குற்றங்களின் அளவு மற்றும் தீவிரம் '2015 இல் தொடங்கிய ஒரு மேல்நோக்கிய போக்கு' என்று வியாழனன்று வெளியிடப்பட்ட ஓர் அறிக்கையில் கனடா புள்ளி விவரம் தெரிவிக்கின்றது.







# பாலஸ்தீனிய சார்பு முகாமுக்கு எதிரான தடையை மீளப் பெற்ற பல்கலைக்கழகம்

கியூபெக், ஜூலை 26

பாலஸ்தீனிய சார்பு முகாமுக்கு எதிரான அதன் தடைக் கோரிக்கையை மெக்கில் பல்கலைக்கழகம் வியாழனன்று திரும்பப் பெற்றுள்ளது.


பல்கலைக்கழக மொன்றியல் வளாகத்தில் இருந்து கூடாரங்களை அகற்றி இரண்டு வாரங்களுக்குப் பிறகு பல்கலைக்கழகம் இதனைச் செய்துள்ளது.

ஒரு சுருக்கமான அறிக்கையில், 'ஜூலை 10 அன்று முகாம் அகற்றப்பட்டமையால் இனி அது தேவையில்லை' என்பதால், அதன் கோரிக்கையை திரும்பப் பெற்றதாக பல்கலைக்கழகம் கூறியுள்ளது.

இஸ்ரேல் - ஹமாஸ் போருடன் தொடர்புடைய அமெரிக்காவில் இதே போன்ற வளாக எதிர்ப்பு அலைகளைத் தொடர்ந்து, எதிர்ப்பாளர்கள் ஏப்ரல் 27 அன்று ஒரு பகுதியை வேலியிட்டு கூடாரங்களை அமைத்தனர்.

பலஸ்தீனப் பகுதிகளை இஸ்ரேல் ஆக்கிரமித்ததில் 'உடந்தை' என்று தாங்கள் கூறிய நிறுவனங்களிலிருந்து மெக்கில் பல்கலைக்கழகம் விலக வேண்டும் என்றும், இஸ்ரேலிய நிறுவனங்களுடனான உறவுகளைத் துண்டிக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரினர்.

மே மாதத்தின் நடுப்பகுதியில், போராட்டக்காரர்களை பொலிஸார் மூலம் அகற்றுவதற்கான அவசர நீதிமன்ற உத்தரவைப் பெறுவதில் பல்கலைக்கழகம் தோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கது.



# உயிரியல் பூங்காவில் ஒட்டகச்சிவிங்கி சாவு



ஒன்ராரியோ, ஜூலை 26

டொராண்டோ உயிரியல் பூங்காவில் உள்ள இளைய ஒட்டகச்சிவிங்கி உயிரிழந்துள்ளது.

ஸ்வாஹிலி மொழியில் நம்பிக்கை என்று பொருள்படும் மாடுமைனி என்ற ஒட்டகச்சிவிங்கி, பெப்ரவரி 25, 2022 அன்று மிருகக்காட்சிசாலையில் பிறந்தது.

காஸ்ட்ரேஷன் அறுவை சிகிச்சைக்காக பொது மயக்க மருந்தின் கீழ் இருந்த நிலையில் அது உயிரிழந்துள்ளது.



# கனடா சென்ற இலங்கை மாணவி அங்கு புற்றுநோயால் உயிரிழப்பு!

கனடாவின் கான்கார்டியா பல்கலைக்கழகத்தின் கணிதப் பிரிவில் தத்துவவியல் முதுகலைப் பயின்று வந்த இலங்கை மாணவி கடுமையான புற்றுநோயுடன் போராடிய நிலையில் உயிரிழந்துள்ளார்.

குருநாகல் தொரட்டியாவ, மல்லவபிட்டிய பிரதேசத்தை சேர்ந்த 29 வயதுடைய டபிள்யூ.எம். மாஷா விஜேசிங்க என்ற திருமணமான பட்டதாரி மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கனடாவின் கான்கார்டியா பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பு படித்துக் கொண்டிருந்த அவர், கடுமையான வயிற்று புற்றுநோயால் பாதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

இந்த நிலையில் இந்த மாணவி தனது கணவருடன் இலங்கைக்கு வந்து புற்று நோய்க்கு இலங்கையில் சிகிச்சை பெற்ற நிலையிலேயே உயிரிழந்துள்ளார்.

இவர் பேராதனை பல்கலைகழகத்தின் பட்டதாரி மாணவியாவார் அதே சமயம் பேராதனை பல்கலைகழகத்தில் விரிவுரையாளராக பணிபுரிந்து வந்துள்ளார். மேலதிக கல்விக்காக கனடா சென்ற சமயமே அவர் உயிரிழந்தார் என அந்தப் பெண்ணின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.




# மிஸிஸாகாவில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் பலி

கனடாவின் மிஸிஸாகாவில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

பிரிட்டானியா மற்றும் மெக்லாகுடின் வீதிகளுக்கு அருகாமையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வாகனமொன்று மின் கம்பத்தில் மோதுண்டதனால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மின் கம்பத்தில் மோதுண்ட வாகனம் தீப்பற்றிக் கொண்டதாகவும், தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

என்ன காரணத்தினால் இந்த விபத்து இடம்பெற்றது என்பது பற்றிய விவரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.




# பரிசு வென்ற 4 லொத்தர் சீட்டுகளுக்கு உரிமை இன்னும் கோரப்படவில்லை!

கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் பரிசு வென்றெடுக்கப்பட்ட நான்கு லொத்தர் சீட்டுகள் இன்னமும் பணப்பரிசு பெற்றுக் கொள்ளப்படாத நிலையில் காணப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

வெற்றி இலக்கங்களை பரீட்சித்துப் பார்க்குமாறு பொது மக்களிடம் கோரப்பட்டுள்ளது.

ஒன்றாரியோ லொத்தர் சீட்டு மற்றும் கேமிங் திணைக்களம் இந்த கோரிக்கையை விடுத்துள்ளது.


மேக்ஸ் மில்லியன் சீட்டிலுப்பில் வென்றெடுக்கப்பட்ட ஒரு மில்லியன் டொலர் பரிசுத்தொகை இதுவரையில் உரிமை கோரப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

லொட்டொ மெக்ஸ் சீட்டிலுப்பில் 1,32,000 டொலர் பணப் பரிசுத் தொகையும் கோரப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் என் கோர் லொத்தர் சீட்டிலுப்பின் இரண்டு லொத்தர் சீட்டுகளின் தலா ஒரு லட்சம் டொலர் பெறுமதியான வெற்றிகள் இதுவரை உரிமை கோரப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. ஒட்டாவா, பீல் மற்றும் வெல் லேண்ட் போன்ற பகுதிகளில் இந்த லொத்தர் சீட்டுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன எனத் தெரிவிக்கப்படுகிறது.

லொத்தர் சீட்டிலுப்பில் பரிசு வென்றவர்கள் பரிசு இலக்கங்களை பரீட்சித்து அவற்றுக்கு உரிமை கோர முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஓர் ஆண்டு காலப்பகுதிக்குள் லொத்தர் சீட்டுப் பரிசு தொகையை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.



# டொரன்டோவில் ஜூலை மாதத்தில் அதிக அளவு மழை இம்முறைதான்!

டொரன்டோவில் பல வருடங்களின் பின்னர் மிகவும் அதிக அளவு மழை பொழிந்த ஜூலை மாதமாக இந்த ஆண்டு ஜூலை மாதம் கருதப்படுகின்றது.

கனடிய காலநிலை மாற்றம் மற்றும் சுற்றாடல் நிறுவனம் இது தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ளது.

ஜூலை மாத ஆரம்பம் முதல் இதுவரையில் டொரன்டோ நகரில் 186 மில்லி மீட்டர் அளவு மழை பெய்துள்ளது.

இந்த மழை வீழ்ச்சியில் அரைவாசிக்கும் மேற்பட்ட மழை வீழ்ச்சி கடந்த செவ்வாய்க்கிழமை அன்று பெய்துள்ளது.

கடந்த 2008 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் மொத்தமாக 193 மில்லி மீட்டர் அளவு மழை பெய்திருந்தது.

இதுவே டொரன்டோவில் ஜூலை மாதம் பெய்த அதிகளவு மழை வீழ்ச்சி என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டு கிட்டத்தட்ட அந்த அளவிற்கு மழை பெய்து உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாதம் பெய்த மழையினால் சில பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டதுடன் சொத்துக்களுக்கும் சேதம் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# காலிஸ்தான் தீவிரவாதிகளினால் கனடா களங்கப்படுத்தப்படுகிறது

## இந்திய வம்சாவளி எம்.பியான சந்திரா ஆர்யா சீற்றம்

காலிஸ்தான் தீவிரவாதிகளால் கனடா களங்கபடுகிறது என்று இந்திய வம்சாவளி எம்.பியான சந்திரா ஆர்யா கூறியுள்ளார்.

காலிஸ்தானிகள் அனைவரும் கனடாவின் உள்ளூர் சட்டங்கள் வழங்கிய சுதந்திரத்தை துஷ்பிரயோகம் செய்துவருகின்றனர் என அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

மேலும், எட்மண்டனில் உள்ள இந்துக் கோவில் மீது காலிஸ்தான் ஆதரவாளர்கள் நடத்திய தாக்குதலுக்கு அவர் கடும் கண்டனம் தெரிவித்தார்.

சமீபத்தில், சந்திரா ஆர்யா மற்றும் அவரது நெருங்கிய நண்பர்களை இந்தியாவுக்கு திரும்பச் செல்லுமாறு Sikhs for Justice அமைப்பின் பிரிவினைவாத தலைவர் குர்பத்வந்த் சிங் பன்னுன் வீடியோ ஒன்றை வெளியிட்டு எச்சரித்துள்ளார்.

அதனைத் தனது x பக்கத்தில் வெளியிட்ட சந்திரா ஆர்யா, காலிஸ்தானி பிரிவினைவாதிகளின் நடவடிக்கையால் கடும் கோபமடைந்தார்.

அவர் தனது பதிவில், 'நாங்கள் இந்துக்கள் உலகின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் கனடா வந்து குடியேறியுள்ளோம். தெற்காசியாவில் உள்ள ஒவ்வொரு நாட்டிலிருந்தும், ஆப்பிரிக்காவின் பல நாடுகள், கரீபியன் மற்றும் உலகின் பல பகுதிகளிலிருந்தும் நாங்கள் இங்கு வந்துள்ளோம்.

கனடா எங்கள் தாயகம். கனடாவின் சமூக-பொருளாதார வளர்ச்சியில் நாம் முக்கிய பங்கு வகித்துள்ளோம். எங்கள் சேவைகள் இங்கு தொடரும். செழுமையான இந்திய



கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தின் மூலம் கனடாவின் பன்முக கலாச்சார மரபுகளை உயர்ந்த நிலைக்கு கொண்டு சென்றுள்ளோம்.

இந்த செயல்பாட்டில், காலிஸ்தானி ஆதரவாளர்கள் கனடா வழங்கிய உரிமைகளை தவறாக பயன்படுத்துகின்றனர். இப்படிப்பட்டவர்களால்தான் கனடா களங்கப்படுகிறது." என்று கூறியுள்ளார்.

இதற்கிடையில், எட்மண்டனில் உள்ள 'பிஏபிஎஸ்' சுவாமி நாராயண் கோவில் சில மர்ம நபர்களால் நாசப்படுத்தப்பட்டது. கோவிலின் சுவர்களில் வண்ணங்கள் தூவப்பட்டன. வெறுக்கத்தக்க கருத்துகளை எழுதப்பட்டன.

செவ்வாய்கிழமை காலை நடந்த இந்த சம்பவத்திற்கு சந்திரா ஆர்யா கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.